# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2019 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க,*
## நீதித்துறை (திருத்தச்) சட்டம்

---

*(2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2019, ஏப்பிறல் மாதம் 05 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *8.00*** **தபாற் செலவு : ரூபா *15.00***

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2019 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம்

[2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

*ச.வ.- ஓ. 33/2017*

### 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நீதித்துறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப்பெயர்.*

**2.** 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- *1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(i) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :-

"(2) அமைச்சரானவர் காலத்திற்குக்காலம் வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம், அத்தகைய அறிவித்தலில் பெயர் குறிக்கப்படவேண்டியவாறான அத்தகைய ஆட்களை இலங்கைக் குடியரசிற்கு அல்லது அமைச்சர் உசிதமானதெனக் கருதக் கூடியவாறான ஏதேனும் நிருவாக மாவட்டத்திற்கு, சமாதான நீதவான்களாக இருப்பதற்கென நியமிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் வலயத்திற்கு, மாவட்டத்திற்கு அல்லது பிரிவுக்கு சமாதான நீதவானுக்கான ஏதேனும் நியமனமொன்று, இக்காப்புவாசகம் நடைமுறைக்குவரும் திகதிக்கு முன்னர் செய்யப்பட்டிருக்கின்றவிடத்து, அத்தகைய நியமனமானது, அத்தகைய வலயத்திற்கு, மாவட்டத்திற்கு அல்லது பிரிவுக்கான

நியமனத்தின்போது அத்தகைய சமாதான நீதவானின் வதிவிடம் எந்த பிரதேச செயலாளர் பிரிவினுள் அமைந்திருந்ததோ அந்த பிரதேச செயலாளர் பிரிவை உள்ளடக்குகின்ற இயைபான நிருவாக மாவட்டத்திற்குச் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.";

(ii) உட்பிரிவு (2) இனை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(2அ) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "நிருவாக மாவட்டம்" என்பது, (392 ஆம் அத்தியாயமான) நிருவாக மாவட்டங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு நிருவாக மாவட்டம் எனப் பொருள்படும்.";

(iii) உட்பிரிவு (5) இனை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(6) அமைச்சரானவர், சமாதான நீதவானொருவரின் பதவியை இடை நிறுத்துவதற்கான, இல்லாதாக்குவதற்கான மற்றும் முடிவுறுத்துவதற்கான ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*